1990 மே 9]

(ஈ) குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு, தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு நாஞ்சில் இ. மனோகரன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

திரு. கோ. வீரையன் : ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேசன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த மூன்று சட்டத்திலும் தொள்ளாயிரத்து தொண்ணூராம் ஆண்டு, தொள்ளாயிரத்து தொண்ணூராம்ஆண்டு என்றுசொன்னார்கள். அது 1990 ஆம் ஆண்டா ? அல்லது இன்னும் ஆயிரம் ஆண்டு களுக்குப் பின்பு, ஏன் என்றால், தொள்ளாயிரத்து தொண்ணூராம் ஆண்டு என்று சட்டத்திலே பதிவாகிவிட்டால்....சிரிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : 1990 ஆம் ஆண்டில் வாழ்ந்து கொண்டிருக்கிற வீரையனுக்கு இந்தச் சந்தேகம் வரக்கூடாது. (சிரிப்பு)

7. சட்ட முன்வடிவுகள் (ஆய்வுசெய்தல்)

(அ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன் முடிவு எண். 23/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

11-00 மணி

* திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியிலே நிதியாதாரத்தைப் பெருக்கும் நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. நிதியாதாரத்தைப் பெருக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு கல்வி நிறுவனங்களின்மீது வரி விதிக்க, சொத்து வரி விதிக்க அனுமதிக்கப்படுவது சரியாக இருக்குமா என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். கல்விக்காக மாநில அரசு ரூ. 1,042 கோடி செலவு செய்கிறது. அதிலேகூட புதியதாக கல்லூரி துவக்கவேண்டுமென்றால், நிதி வசதி இல்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். புதியதாகப் பள்ளிக்கூடங்கள் தேவை என்றால், இருக்கின்ற நிதியை வைத்துத்தான் செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். தொகுப்பு ஊதியம் தான் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். இந்த அளவு சிரமம் இருக்கின்ற நேரத்திலே, நீங்கள் கல்வி நிறுவனங்களுக்கு சொத்து மதிப்பு போட்டு, வரி விதிக்க அனுமதிப்பீர்களானால், அவர்கள் அந்த வரியை செலுத்துவதாக வைத்துக் கொண்டால், அவர்கள் அரசிடம்தான் மானியம் கேட்கப் போகிறார்கள். நாங்கள் இவ்வளவு ஆயிரம் ரூபாய் செலுத்தியிருக்கிறோம், இவ்வளவு இலட்சம் ரூபாய் செலுத்தியிருக்கிறோம், எங்களுடைய கல்வி நிறுனத்திற்கு வேறு எந்த வருமானமும் கிடையாது.

*4—5—1990 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.